



மாநிலம் முன்னேற, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையே தேவை என்று உணர்ந்து, குளித்தலை சட்டமன்றத் தொகுதி, மருதூர் பேரூராட்சி அ.தி.மு.க., த.வெ.க., நாம் தமிழர் கட்சிகளைச் சார்ந்த மாற்றுக் கட்சியினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ முன்னிலையில், தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். குளித்தலை எம்.எல்.ஏ இரா.மாணிக்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக சார்பில் – கழக நிர்வாகிகள் குடும்பத்தில் உள்ள உயர்கல்வி பயிலும்

# 90 வாரிசுகளுக்கு ரூ. 17 லட்சம் மதிப்பில் கலைஞர் கல்வி உதவித் தொகை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!



நாமக்கல், ஜன.3-

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் கிளை கழகம், வார்டு கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத் தலைவர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் 3 மற்றும் 2 உறுப்பினர் அட்டைகளுக்கு குறையாமல் உள்ளவர்களின் நிர்வாகிகள் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் 90 வாரிசுகளுக்கு மாவட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல் சேந்தமங்கலம் ராசிபுரம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உள்ள கிளை, வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் BLA 2 நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள் குடும்ப வாரிசுகளுக்கு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வழிகாட்டுதலுடன் மாவட்ட கழக செயலாளர் பொறுப்பேற்றது முதல் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை என்ற பெயரில் வழங்கி வருகிறார்.

அதன்படி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், இனமானப் பேராசிரியர் கூட்ட அரங்கில் நாமக்கல் கிழக்கு நகரம் நாமக்கல் மேற்கு நகரம் நாமக்கல் தெற்கு நகரம் ராசிபுரம் நகரம் ஆகிய மூன்று பகுதிகளைச் சேர்ந்த கிளை கழகம், வார்டு கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத்தலைவர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் 3 மற்றும் 2 உறுப்பினர் அட்டைகளுக்கு குறையாமல் உள்ளவர்களின் குடும்பத்தில்

உயர்கல்வி பயிலும் 90 வாரிசுகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி, தொழிற்கல்வி படிக்கும் 41 பேருக்கும், பட்டப்படிப்பு படிக்கும் 49 பேருக்கும் ஆக மொத்தம் 90 வாரிசுகளுக்கு கலைஞர் கல்வி உதவித் தொகையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயரும், நாமக்கல் கிழக்கு நகர கழக செயலாளருமான செ.பூபதி, நகரக் கழக செயலாளர்கள் ராசிபுரம் என்.ஆர்.சங்கர், நாமக்கல் தெற்கு ராணா ஆனந்த், நாமக்கல் மேற்கு அ.சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வணங்குவதற்கு அடிக்கடி 'கால்களை' மாற்றும் எடப்பாடி பழனிசாமி!



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
கழக வர்த்தகர் அணிச் செயலாளர்

திருப்போரூர், கும்மிடிப்பூண்டி ஆகிய கூட்டத்தில் பேசிய எடப்பாடி, "ரகுபதி என்று ஒருவர் இருக்கிறார். வேஷ்டியை மாற்றுபவர், அன்றைக்கு ஒரு எட்டப்பன், இன்றைக்கு ரகுபதி, துரோகத்தின் வடிவமாக இருக்கிறார்" என்று எடப்பாடி பேசியுள்ளார்.

"தான் திருடி பிறரை நம்பமாட்டாள்" என்கிற கதையாக, ஈயத்தை பார்த்து இளித்ததாம் பித்தளை என்கிற கதையாக பேசி இருக்கிறார்.

"அழகுக்கு மறுபெயர் பெண்ணா அல்லி மலருக்கு மறுபெயர் கண்ணா – தமிழுக்கு மறுபெயர் அமுதா" என்பதுபோல் துரோகத்துக்கு மறுபெயர் எடப்பாடிதான்.

முதலில் ஜெயலலிதா கால், சசிகலா கால், ஓ.பி.எஸ். கால், இப்போது மோடி, அமித்ஷா கால் என, விழுவதற்கு கால்களை அடிக்கடி மாற்றிக் கொள்பவர் எடப்பாடி, ரகுபதியின் குற்றச்சாட்டுக்கு பதில் கூறாமல் அவரை கட்சிமாறினார் என்று மட்டும் சொல்வது நியாயமா?

தந்தை பெரியார், காங்கிரஸ் மாநில தலைவராக இருந்த போது, கருத்து வேறுபாடால் திராவிடர் கழகம் ஆரம்பித்ததோடு, கருப்பு – சிவப்புக்கு மாறியவுடன், ஏன் மாறினீர்கள் என கேட்பது முட்டாள்தனமானது.

உதயசூரியனில் நின்று வெற்றி பெற்றுவிட்டு, கருப்பு சிவப்பு வேட்டியை உழைக்கும் கரங்கள், உரிமைக்குரல் படம் வரை கட்டிவிட்டு, கருப்பு, வெள்ளை, சிவப்பு கரை வேட்டி ஏன் கட்டினாய் என எம்.ஜி. ஆரை கேட்கமுடியுமா?

தனக்கு அடைக்கலம் தந்த சசிகலா அம்மையாரையே கட்சியை விட்டு நீக்கிய எட்டப்பன் துரோகி பழனிசாமி.

1989-ல் தனக்கு எம்.எல்.ஏ. சீட் பெற காரணமாக இருந்த நடராஜன் மரணத்திற்கு கூட தானும் செல்லாமல், அ.தி.மு.க. அமைச்சர்களையும், கட்சிக்காரர்களையும் போகவிடாமல் செய்த நன்றி கெட்ட எட்டப்பன் பழனிசாமி.

செங்கோட்டையனை முதல்வராக்க நினைத்திருந்த சசிகலா அம்மையாரிடம், தனக்காக பல கோணங்களில் பேசிப் புரிய வைத்து தன்னை முதல்வராக்கிய தினகரனை வழக்கில் மாட்டிவிட்டு, கட்சியை விட்டு தூக்கி வீசிய துரோகி எட்டப்பன்தான் எடப்பாடி.

தன்னை அரசியலுக்கு கொண்டு வந்த செங்கோட்டையனையே கட்சியை விட்டு நீக்கிய துரோகி பழனிசாமி.

தன்னை மெருகேற்றிய தலைவி ஜெயலலிதாவால் 5 ஆண்டு காலத்திற்கு சட்டமன்ற உறுப்பினராக பணிபுரிய அனுமதித்த 18 சட்டமன்ற உறுப்பினர்களின் இரண்டாண்டு பதவி பறிப்புக்கு காரணமாக இருந்த துரோகி எட்டப்பன் எடப்பாடி.

தினகரன் வெளியேறிய சூழலில் தனது 11 ஆதரவு எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் வந்து, ஆதரவு தந்து, எடப்பாடி ஆட்சியை கவிழ்ந்து விடாமல் காப்பாற்றிய ஓ.பி.எஸ்.ஸை கட்சியை விட்டு நீக்கிய துரோகி எட்டப்பன்தான் பழனிசாமி.

37 எம்.பி.-க்கள் – தமிழக ஆட்சியுடன் வந்து பொறுப்பேற்றுவிட்டு, இன்று 0-வாக பத்து தோல்வி பழனிசாமி என்கிற பட்டத்துடன் அ.தி.மு.க. விற்கே துரோகம் செய்திட்ட எட்டப்பன் எடப்பாடி.

2024 நாடாளுமன்ற தேர்தல் வரை தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்துவிட்டு, தேர்தலுக்கு சில வாரமே இருக்க, பா.ஜ.க.வை கழட்டிவிட்டு, பா.ஜ.க.வுக்கு துரோகம் செய்த எட்டப்பன் எடப்பாடி மற்றவர்களை சொல்வது, ஆலமரத்தைப் பார்த்து, காற்று அடித்தால் அடிக்கடி வளையாதே என நாணல் சொன்னது மாதிரி உள்ளது.

தேர்தல் நேரத்தில் வாக்குறுதி என்பது, ஆள்பாதி – ஆடைபாதி போல.

தேர்தலில் சொன்னது ஒன்றிரண்டு விடுபட்டும் போகலாம். சொல்லாத பல திட்டங்கள் செயலுக்கும் வரலாம்.

தங்கத் தளபதி கொண்டு வந்த 20 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவு என்பது உலக வரலாற்றில் புதியது.

தாயுமானவர் திட்டம், வீடு தேடி மருத்துவம், நலன் காக்கும் ஸ்டாலின் என ஆஞ்சநேயர் வாலைக் காட்டிலும், திரௌபதி சேலையை காட்டிலும் ஒன்றிய அரசின் ஒத்துழைப்பே இல்லாமல் தமிழ்நாட்டில் புதிய புதிய திட்டங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

தேர்தல் வாக்குறுதிகளுக்குத் தான் வாக்கு என்றால் நாங்கள் மகளிருக்கு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக ரூபாய் ஆயிரம் வழங்குவதாக கூறிய 5 நாள் கழித்து அ.தி.மு.க. நாங்கள் வந்தால் ரூ. 1,500 தருகிறோம் என்றீர்களே மக்கள் உங்களுக்கா ஓட்டு போட்டார்கள்? தளபதிக்குத்தானே போட்டார்கள். சொல்வது பெரிது – சொல்கின்ற ஆளையும் பார்ப்பார்கள்.

தி.மு.க.வினர் "கூட்டணியை பற்றித்தானே சொன்னார்கள், எங்களைப் பற்றியா குறை சொன்னார்கள்" என்கிறார் எடப்பாடி.

நீங்கள் கார் மாறி, கார் மாறி முகத்தை மூடிக்கொண்டு அமித்ஷாவை பார்க்கப் போனதை நாங்கள் சொல்லவில்லையா?

சம்பந்தியைக் காப்பாற்ற, நெடுஞ்சாலை துறை காண்டிராக்ட் 4800 கோடி ரூபாய் ஊழல் வழக்கிற்காகத்தான் பா.ஜ.க. கூட்டணிக்கே சென்றீர்கள் என்று தி.மு.க. உங்களை நோக்கி சொல்லவில்லையா?

பரதேசிக்கு 'பார்ப்பவனை எல்லாம் பரதேசி' எனக் கூறத்தோன்றும். அதுபோல அமாவாசைக்குத் தான் எல்லாம் அம்மாவாசையாகத் தெரியும் என நாங்கள் உங்களை நோக்கிச் சொல்லவில்லையா?

அடுத்த கட்சியின் துண்டை தன் கட்சித் தோழருக்கு அணிவித்து வரச்சொல்லிவிட்டு கூட்டணி கண்ணுக்கு தெரிய ஆரம்பித்துவிட்டது என கூறிய மகா பெரிய மோசடிக்காரர் எடப்பாடி என நாங்கள் உம்மைப் பார்த்துச் சொன்னதில்லையா?

### பொள்ளாச்சி நகர இளைஞர் அணி சார்பில் அமைப்பாளர் நவீன்குமார் ஏற்பாட்டில்

# துணை முதல்வர் பிறந்தநாள்: YOUTH WING TROPHY கிரிக்கெட் போட்டி!

## மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்!

கோவை, ஜன. 3-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலின் படி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி, கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆலோசனையின் படி கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி நகர இளைஞர் அணி சார்பில் இளைஞர் அணி அமைப்பாளர் நவீன்குமார் ஏற்பாட்டில் பொள்ளாச்சி வடக்கு (மத்திய) ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் ராசு தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், நகர கழக பொறுப்பாளர்கள் இரா.நவநீத கிருஷ்ணன் (வடக்கு), எம்.அமுதபாரதி (தெற்கு), நகர் மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வடுகபாளையம் சரவணா ஸ்போர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற YOUTH WING TROPHY கிரிக்கெட் போட்டியை மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார்,

இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசாக கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி வடக்கு நகர பொறுப்பாளர் இரா.நவநீதகிருஷ்ணன் வழங்கும் 20,000 ரூபாய் ரொக்கப் பணம் மற்றும் சுழற்கோப்பையும், இரண்டாம் பரிசாக மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் வழங்கும் 15,000 ரூபாய் ரொக்கப் பணம் மற்றும் சுழற்கோப்பையும், மூன்றாம் பரிசாக, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நிஷாந்த், பொதுக்குழு உறுப்பினர் சாந்தலிங்க குமார் வழங்கும் 10,000 ரூபாய் ரொக்க பணம் மற்றும் சுழற்கோப்பையும், நான்காம் பரிசாக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல், முத்துக்குமார், யுவராஜ் வழங்கும் சுழற்கோப்பையும் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியம், பொருளாளர் ஜெயபிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, அறங்காவலர் குழு உறுப்பினர் எஸ்.பி.எம்.பார்த்திபன்,

ஆனைமலை பேரூர் கழக செயலாளர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.ஜெயக்குமார், ஏ.ஆர்.வி.எஸ்.சந்தலிங்ககுமார், நகர அவைத்தலைவர் அழகப்பன், துணைச் செயலாளர் ச.தர்மராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணிமாறன் தென்றல், திருமலைராஜா, நிஷாந்த், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் வசந்தராம், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் கே.வி.ஆறுமுகம்,

தகவல் தொழில்நுட்ப அணி சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் சைஜு, மாவட்ட சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் அவிநாஷ் கார்த்திக், ஜெயக்குமார், பஞ்சலிங்கம், கருமாபுரம் சுரேஷ், பி.ஏ.செந்தில்குமார், சுதா கார்த்திகேயன், அருண் கார்த்திக், மாரிமுத்து, விஜயகுமார், யுவராஜ், ஈஸ்வரன், பட்டால் மணிகண்டன், சபரி முத்து வீரண், பாண்டிதுரை, பாலமுருகன், பாண்டிராஜ், விக்னேஷ் பிரபு, பிரவீன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் அபூபக்கர் சித்திக் நன்றியுரையாற்றினார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ம.த. மல்லையன்**
**சனவரி 3 (2014)**



தந்தை பெரியார்,
பேரறிஞர் அண்ணா,
தலைவர் கலைஞர் ஆகியோர்
வழிநின்று கம்பம் பகுதியில் கழகம்
வளர்த்தவர்.

க.புதுப்பட்டி பேரூராட்சி மன்றத்
தலைவராக தொடர்ந்து பதினைந்து
ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து,
அறிஞர் அண்ணா முதல்வராக
இருந்த சமயத்தில் அப்பகுதியில் அரசு
உயர்நிலைப் பள்ளியும் – தலைவர்
கலைஞர் முதல்வராக இருந்த போது
எண்ணற்ற நலத்திட்டங்களையும்
கொண்டு வந்து அப்பகுதி மக்களிடம்
கழகத்திற்கு நற்பெயரைப்
பெற்றுத் தந்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்,
விலைவாசி உயர்வு எதிர்ப்பு
போராட்டம் மற்றும் கழகம் நடத்திய
அனைத்துப் போராட்டங்களிலும்
பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியம் வெள்ளபள்ளத்தில் என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் ஒன்றிய கழக செயலாளர் மகா. குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, தலைஞாயிறு பேரூராட்சி முன்னாள் தலைவர் ராஜேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.புவனேஸ்வரி மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் அண்ணல் காந்தியின் பெயர் நீக்கியது, 100 நாள் வேலைத் திட்டத்தை சிதைத்த ஒன்றிய பாஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.உடன் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர்கள். கோ.அறிவழகன், மா.அன்பழகன், தெய்வ.இளையராஜா, விசிக. அன்பானந்தம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிபத்மாவதி, மார்க்சிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் இளங்கோவன்,பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மற்றும் கழகத் தோழர்களும், மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகளும், பொதுமக்களும் பெருந்திரளாகப் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.